திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கிள்ளியூர் தொகுதி, கடற்கரை கிராமங்கள் நிறைந்த பகுதி. அங்கு கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்பு அடித்த காற்றினாலும், புயலினாலும் அந்தப் பகுதியிலுள்ள கொல்லங்கோடு– திருப்பூர் சாலையை ஒன்றரை கிலோ மீட்டர் கடல் அடித்துச் சென்றுவிட்டது. அந்தப் பகுதியிலுள்ள கிராமங்களில் அநேக வீடுகள் கடலில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. ஆகவே, அந்தப் பகுதிக்கு தூண்டில் வளைவுகள் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை அரசின் ஆய்வில் இருக்கிறது. விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

55—

கால்நடைக் கிளை மருத்துவமனை

***22853—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி தொகுதி, அளிஞ்சிகுளம் ஊராட்சியில் புதிய கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

உறுப்பினர் குறிப்பிட்டிருக்கின்ற அளிஞ்சிகுளம் ஊராட்சியிலே கால்நடைக் கிளை நிலையம் அமைக்கத் தேவையான 3,000

2013 அக்டோபர் 29]

கால்நடை அலகுகளுக்குக் குறைவான அலகுகள் இருக்கின்ற காரணத்தினால் அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏங்கி நிற்கும் தமிழகத்தைத் தாங்கி நிற்கும் தமிழகத்தின் தலைமகள், மாற்றம் தந்த தமிழகத்திற்கு நாளும் ஒரு திட்டம் தந்து, தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து, பணிவோடு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதியில், நாட்ராம்பள்ளி ஒன்றியம், அளிஞ்சிகுளம் ஊராட்சி, வாணியம்பாடியிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. மேலும், அளிஞ்சிகுளம் ஊராட்சி சுற்றிலும் மலைகளால் சூழப்பட்ட பகுதியாக உள்ளதால் விவசாயக் குடும்பங்கள் மட்டுமே வாழ்கின்ற பகுதியாக உள்ளது. இந்த ஊராட்சியைச் சுற்றிலும் பத்துக்கும் மேற்பட்ட ஊராட்சிகள் உள்ளன. இப்பகுதி மக்கள் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்கின்றனர். இப்பகுதி விவசாயிகள் அதிகளவில் ஆடு, கறவை மாடு, உழவு மாடு போன்ற பல்வேறு கால்நடைகளை வளர்த்து வருகிறார்கள். கால்நடைகளுக்கு சிகிச்சைப் பெற வேண்டுமானால் வாணியம்பாடியில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கோ அல்லது பத்து கிலோ மீட்டர் தூரம் உள்ள அம்பலூர் கால்நடை மருத்துவமனைக்கோ சென்று சிகிச்சைபெற வேண்டிய சிரமம் உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் 1,500–க்கும் மேற்பட்ட கால்நடைகளை வைத்திருக்கின்ற விவசாயிகளின் நலன் கருதி, அளிஞ்சிகுளம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனையை அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் அன்போடு கேட்டு அமர்கிறேன்.*

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைத் துறையின் விதிகளின்படி, கால்நடை மருத்துவமனை அமைக்க 3,000 கால்நடைகள் இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்கிறார், 1,500 கால்நடைகள்தான் இருக்கின்றன என்று. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய திட்டமான விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டத்தின்படி, கிராமப் பகுதிகளில் இருக்கின்ற நிலமற்ற விவசாயிகள் எல்லாம் வாழ்க்கையில் உயர வேண்டுமென்கின்ற நோக்கத்தின் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் தொகுதியில் தற்போது விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் பகுதியில் எதிர்காலத்தில் அதிகமாக கால்நடைகள் வருகின்ற வாய்ப்பு இருக்கிறது. எனவே, அங்கே கால்நடைகள் அதிகமாகும்போது, கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமையும் முக்கியத்துவமும் வாய்ந்த எங்கள் மன்னார்குடி தொகுதியில், தென்பரை ஊராட்சியில், கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் நீண்டகாலமாகக் கோரி வருகிறார்கள். இந்தப் பகுதியில் ஏறத்தாழ 30,000 கால்நடைகள் உள்ளன. தற்போது அந்தப் பகுதியிலுள்ள மக்கள், தங்கள் கால்நடைகளை 5 கிலோ மீட்டர் தூரம் உள்ள திருமக்கோட்டை அல்லது பைங்காநாட்டிற்கு எடுத்துச்செல்ல வேண்டிய நிலையுள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பகுதியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவ்வாறு கால்நடை மருத்துவமனை அமைக்க முன் வந்தால், அந்தப் பகுதியில் கால்நடை மருத்துவமனைக் கட்டடம் அமைப்பதற்கான நிதியை ஒதுக்கவும் நான் தயாராக இருக்கிறேன் என்று இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். மேலும், ஏற்கெனவே எடகீழையூர் கிராமத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

கிளை மருத்துவமனையை அமைத்துத் தருகிறேன் என்று தெரிவித்திருக்கின்றார். அது குறித்து ஏதேனும் விவரம் உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கிராமம் கால்நடைத் துறையினுடைய விதிகளுக்குட்பட்டிருக்கும் என்று சொன்னால், அங்கே ஒரு கிளை கால்நடை மருத்துவமனையை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் ஒரு கால்நடைக் கிளை மருத்துவமனையை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். வரும் நிதியாண்டில் கால்நடைக் கிளை மருத்துவமனைகள் அமைக்க நிதி ஒதுக்கப்படும்போது அங்கே கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

56—

பஞ்சாலை

***34770—திரு. இ. சுப்பையா:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் பஞ்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,